# டிபிகேஎல் அதிகாரிகளுக்கு

## லஞ்சம் கொடுத்த அறுவருக்கு அபராதம்



கோலாலம்பூர், ஜூலை 19-
தலைநகரில் அந்நிய நாட்டவர்கள் சட்டவிரோதமான முறையில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கும் வகையில் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் (டிபிகேஎல்) அமலாக்கப் பிரிவினருக்குக் கையூட்டு கொடுத்த குற்றத்திற்காக அந்நிய நாட்டவர் ஒருவர் உட்பட அறுவருக்கு நேற்று கோலாலம்பூர் செஷன்ஸ் நீதிமன்றம் 6 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரிங்கிட் வரை அபராதம் விதித்தது.

மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தின் அமலாக்கப் பிரிவினர் மேற்கொண்ட சிறப்பு ஓப் ஸ்டார் சோதனை நடவடிக்கையின் கீழ் இந்த அறுவரும் கைது செய்யப்பட்டனர்.

ரோம்ஸி அபிடின் (வயது 53), அஸ்ஹார் அபு பாக்கார் (வயது 59), இட்ருஸ் முகமட் (வயது 38), கே புனிதன் (வயது 43), ஜமாலுடின் ஹஷிம் (வயது 58) உட்பட சீனாவைச் சேர்ந்த தெங் ஹுய் (வயது 52) என்ற உணவக உரிமையாளர் ஒருவரும் இவர்களுள் அடங்குவர்.

நீதிபதி சுஸானா ஹுசேன் முன்னிலையில் நிறுத்தப்பட்ட ரோம்ஸிக்கு 8 ஆயிரம் ரிங்கிட்டும் அஸ்ஹார், இட்ருஸுக்கு தலா 6 ஆயிரம் ரிங்கிட்டும் புனிதன், ஜமாலுடினுக்கு தலா 8 ஆயிரம் ரிங்கிட்டும் தெங் உய்க்கு 10 ஆயிரம் ரிங்கிட்டும் அபராதம் விதிக்கப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட அறுவரும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் நீதிபதி அவர்களுக்கு இந்த அபராதத்தை விதித்தார்.

அவர்கள் தங்களுக்கான அபராதத் தொகையைச் செலுத்தத் தவறினால் 3 வாரம் முதல் 3 மாதங்கள் வரை சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி கூறினார்.

மேற்குறிப்பிட்ட அறுவரும் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவு அதிகாரி முகமட் ஸஹாய்மி ஸக்காரியாவுக்கு கையூட்டுக் கொடுத்ததாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

1976ஆம் ஆண்டு ஊராட்சி மன்றச் சட்டத்தின் 101 (1) (5) பிரிவின் கீழ் தங்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதற்கு அவர்கள் அந்த அதிகாரிக்கு 200 ரிங்கிட் முதல் 500 ரிங்கிட் வரை லஞ்சம் கொடுத்ததாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

வியாபாரம் செய்வதற்கு லைசென்ஸ் இல்லாதது, அந்நிய நாட்டவர்களை வேலைக்கு அமர்த்தியது, தங்களிடம் வேலை செய்யும் அந்நிய நாட்டவர்களுக்குப் போதுமான அடையாள ஆவணங்கள் இல்லாதது ஆகிய குற்றங்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதற்கு அவர்களுக்கு இப்பணம் லஞ்சமாக வழங்கப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. கடந்த 18.10.2022ஆம் தேதி முதல் 18.7.2023ஆம் தேதி வரை ஜாலான் புடு, ஜாலான் இம்பி ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளில் அவர்கள் இக்குற்றத்தைப் புரிந்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. குற்றவியல் சட்டத்தின் 214ஆவது பிரிவின் கீழ் குற்றச்சாட்டை எதிர்நோக்கி இருந்த அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் 6 மாத சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்க சட்டத்தில் இடம் உண்டு.